முருகப்பெருமான் துணை

**மகான் மார்க்கண்டேயர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.08.2023**, செவ்வாய்கிழமை

1. வானவர்கள் மெச்சும் தருமம்
வள்ளலாய் வழங்கும் அரங்கா
தானதரும நெறி முறைக்கு
தனி இலக்கணம் தந்த தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது நள்ளி திங்கள்
ஆற்றல்பட முப்பான் திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 30 ம் நாள், 15.08.2023, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் மார்க்கண்டேயர் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரம் போகா சமூகத்தை
சுத்தநெறி கொண்டு படைக்க
4. படைக்க அகத்தியர் குலம் நிறுவி
பசிபிணி விரட்டி மீட்கும்
படைகளை உருவாக்கியே
பாரெங்கிலும் அற்புதம் நடத்தும்
5. நடத்தும் ஞானியே உன்வழி
நம்பிக்கை வைத்து மக்கள்
தடையின்றி தொடர்ந்து வர
தானும் நன்னெறிக்கு வருவதுடன்
6. வருவதுடன் சமூக அவலம் விரட்டி
வையகத்தையே மீட்க நேரும்
தருகின்ற குணம் தயவை
தன்னுள் வளர்ப்பதுடன் அல்லாது

7. அல்லாமல் உலகே பின்பற்ற
அரங்கன் பெருமை பாடிவர
எல்லோரும் தரும நெறிவழிவந்து
எங்கும் சமத்தும சமதர்ம நெறியாக
8. ஆகவே மாற்றம் கண்டு
ஆகாத சாதி இன வெறி அகலும்
மகத்துவம்பட ஆளுமை வழியான
மன்னர் அதிகார வர்க்கமென
9. வர்க்கமென அனைவரும் அரங்கன்
வழிகாட்டல் சக்தி அடைய
தர்க்கமிலா எதார்த்த சேவையாக
தானவர்கள் தொண்டும் தயவாக மாறி
10. மாறியே சாமானியர்க்கும் இனிதே
மறுக்கா உரிமைகள் தேவைகள்
நிறைவேற்றித் தரும் ஆளுமையாக
நிலவுலகம் மாற்றம் கண்டு
11. கண்டுமே ஞான வாழ்வுமாக
கருணையே வடிவான சமூகமாக
உண்டாகும் அகத்தியர் குலவம்சமாக
உலகமே ஒருகுடையின் கீழ் வரும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–